# ஒரு விபத்து கலவரமாக மாறிய கொடூரம்!

## – அண்ணாமலை 'மாணவர்கள்' அட்டகாசம்?

பி.ஆர்.ஏ.

ஒரு விபத்து கலவரமாக மாறியிருக்கிறது. டூ வீலரில் சைடு ஸ்டாண்டை தூக்கிவிடாமல் சீறிப் பாய்ந்து சென்று கொண்டிருந்தான் ஜார்கண்ட் மாநில மாணவன் கௌதம் குமார். ஒரு லாரியை ஓவர்டேக் பண்ண முயல, சிதம்பரம் எஸ்.பி.கோயில் தெருவில் நிலைகுலைந்து விழுந்தான். கைகள் மீது லாரி ஏறி இறங்கியது. 'இந்தி'யில் அலறியபடி, முழுவதும் நொறுங்கிப் போன கைகளுடன் கிடந்த அவனை, அருகில் நின்றவர்கள் ஓடிச் சென்று தூக்கினர். அவர்களிடம் தனக்கு வேண்டியவர்களின் செல்ஃபோன் நம்பரை 'டயல்' பண்ணச் சொல்லி பேசினான் கௌதம்குமார்.

அடுத்த சில நிமிடங்களில் சில மாணவிகளும், மாணவர்களும் அங்கே ஓடி வந்தார்கள். அவர்கள் கௌதம்குமாரைத் தூக்கிக் கொண்டு போய், சிதம்பரம் அண்ணாமலை பல்கலை வளாகத்தில் உள்ள மருத்துமனையில் அட்மிட் பண்ணினார்கள். பல்கலைக்கழக வட்டாரம் ஏக டென்ஷன் ஆனது! அங்குள்ள மருத்துவமனை ஓ.பி.யில் மாணவனுக்கு முதலுதவி செய்யப்பட்டது. அப்போதெல்லாம் சக மாணவர்களுடன் பேசிக் கொண்டே இருந்துள்ளான் கௌதம் குமார். ஆனால் கைகளில் இருந்து கொட்டும் ரத்தம் நின்றபாடாகத் தெரியவில்லை.

இந்நிலையில் நிலைமையின் சீரியஸ் தன்மையை உணர்ந்த ஓ.பி. மருத்துவர்கள், புதுச்சேரி ஜிப்மெர் மருத்துவமனைக்குத் தூக்கிக் கொண்டு போகச் சொன்னார்கள். ஆனால் அப்படி ஜிப்மெருக்குப் போகும் வழியிலேயே அளவு கடந்த ரத்தக் கசிவால் கௌதம்குமார் இறந்தான். இது மாணவர்கள் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. 'பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள ஓ.பி.யில் உருப்படியான ட்ரீட்மென்ட் கொடுத்திருந்தால் மாணவன் உயிர் பிழைத்திருப்பான்' என்று கருதி, அங்கு படிக்கும் வட இந்திய மாணவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்தார்கள். ஏற்கெனவே இங்கு வட இந்திய மாணவர்களுக்கும், நம்மூர் மாணவர்களுக்கும் அடிக்கடி மோதல் ஏற்படுவது உண்டு.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் வீறுகொண்டு எழுந்த வட இந்திய மாணவர்கள், அண்ணாமலைப் பல்கலைக்கழக துணைவேந்தரை சந்தித்தார்கள். அவரிடம், "பல்கலைக்கழ ஓ.பி.யில் ஒழுங்காக ட்ரீட்மென்ட் கொடுக்கவில்லை" என்று கோபப்பட்டார்கள். அதற்கு துணைவேந்தர் ராமநாதன், ஏதோ சமாதானம் சொல்லிப் பார்த்தார். ஆனால் வெளியில் வந்த மாணவர்களோ, "நாளைக்கு வாருங்கள் பேசலாம் என்று சொல்கிறார் துணைவேந்தர்" என்று வேண்டுமென்றே வதந்தியைக் கிளப்பிவிட, சகமாணவனை இழந்த சோகத்தில் இருந்த மாணவர்கள் பல்கலைக்கழக வளாகத்தின் மீது ஆவேசமாகத் தாக்குதலைத் தொடங்கினார்கள்.

உடனே பல்கலைக்கழக நிர்வாகமும் போலீஸுக்குப் ஃபோன் போட, போலீஸ் படை ஸ்பாட்டிற்கு விரைந்து வந்தது. இருட்டு நேரம்! பாலமனாரு பகுதி என்பதால் மாணவர்கள் மீது போலீஸ் அடி விழவிழ, 'தப்பி ஓடுகிறோம்' என்று சிலர் ஆற்றுக்குள் விழுந்தார்கள். அப்படி விழுந்ததில் அந்த ஆற்றில் இருக்கும் ஆகாயத் தாமரையில் கால்கள் சிக்கி மூன்று மாணவர்களின் மரணம் நிகழ்ந்திருக்கலாம் என்பதே இப்போது அண்ணாமலை பல்கலைக்கழக வட்டார 'டாக்' ஆக இருக்கிறது.

